தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590


**ஆணை நாள் – 03.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 33563/D/2020**

திரு.ஆர். ரெங்கராஜ், -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர்/,
செயல் அலுவலர்(I/C),
வல்லம் பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம். -- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 26.07.2019 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | ----- |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 03.09.2019 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | ----- |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 21.10.2019 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (03.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மனுதாரர் திரு. ஆர். ரெங்கராஜ், அவர்கள் மற்றும், பொதுத்தகவல் அலுவலர் R. ராஜா,, செயல் அலுவலர்(I/C), வல்லம் பேரூராட்சி,, அவர்களும் .இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்றார்கள்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் அனுப்பியுள்ள மனுவில்,

1. தஞ்சாவூர் மாவட்டம்., வல்லம் பேரூராட்சி தலைவர் பதவி கால முடிவுக்குப்பிறகு 30.06.2019 வரை செயல் அலுவலர் அல்லது தனியலுவலர்

வரம்புக்குள் அவசர நிதிச்செலவு ஒவ்வொரு நிதியாண்டிலும் செலவிடப்பட்ட செலவுகள் பற்றிய தகவல் வழங்க வேண்டுகிறேன்.

2. தகவ்ல எண் 1ல் உள்ள நிதியாண்டில் ஒவ்வொரு நிதியாண்டிலும் போர்க்கால அடிப்படையில் செலவிடப்பட்ட செலவுத்தொகை பற்றிய முழுத்தகவல் வழங்க வேண்டுகிறேன்.

3. தகவல் எண் 1ல் உள்ள நிதியாண்டில் பேரூராட்சி பற்றிய வரவுகள் செலவுகள் டெண்டர் விடபப்பட்ட முறைகள் பற்றிய தகவல்கள்

4. காலக்கெடுவில் பேரூராட்சியில் கோரப்பட்ட டெண்டர் பற்றிய முழுத்தகவல்கள் வழங்க வேண்டி,

5. பேரூராட்சியில் ஒரு மாதத்திற்கான அத்தியாவசிய அடிப்படை செலவுகளான தேனிர் மற்றும் வாகன போக்குவரத்து செலவுகள் மின்சார கட்டணம் முதற்கொண்டு எவ்வளவு தொகை ரூபாய் செலவு என்ற தகவல் வழங்க,

6. தகவல் எண் 1ல் உள்ள காலக்கெடுவில் செயல் அலுவலர் அல்லது தனியலுவலர் செயல்பாடு பற்றிய டை குறிப்பு நகல் வழங்கிடவும், அதனை பார்வையுடவும் அதனை நகல் எடுத்துக்கொள்வது தொடர்பாக தகவல் வழங்க வேண்டி,

7. தகவல் எண்.1ல் உள்ள பேரூராட்சியில் குப்பைகள் கொட்டுவதற்கு விடப்பட்ட டெண்டர் மேலும் எந்த இடத்தில் கொட்டுகிறார்கள் அதனை எதற்கு பயன்படுத்தப்படுகிறது மற்றும் இதனை ஆய்வு செய்த அதிகாரி பற்றிய ஆய்வறிக்கை நகல் வழங்கிடவும் அதனை பார்வையிடவும் என்னோடு ஒருவர் வருவார் என்பதை தெரிவிக்கிறேன். என 7 இனங்களில் தகவ்லகள் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (03.11.2020) தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் 02.11.2020-ல் தகவல் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத்தகவல் அலுவலர் தெரிவித்தார். மேற்படி மனுதாரர் தனக்கு உரிய தகவல்கள் வழங்கவில்லை என்றும், மேலும், அதிகாரிகள் உரிய தகவல்கள் வழங்காமல் பொதுமக்களை அலைக்கழிப்பதாகவும் தெரிவித்தார். பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்வது பொது நிர்வாக அமைப்பின் உரித்தான கடமையாகும். ஆகவே, பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுத்தாமல் உரிய தகவல்கள் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டு, மனுதாரருக்கு உரிய தகவல்களை உடனடியாக வழங்க பொதுத்தகவல் அலுவலுக்கு உத்தரவிடப்பட்டு, இவ்வழக்கு முடித்துவைக்கப்படுகின்றது.

மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழங்கப்படவில்லை எனில் இவ்வாணையத்தின் 9499933592 என்ற எண்ணிற்கு தெரிவிக்கலாம் என மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**ஒம்/-(சு.முத்துராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

**/ஆணையத்தின் ஆணைப்படி/**

**உதவிப் பதிவாளர்**

## வழக்கு எண். SA 33563/D/2020

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுத்தகவல் அலுவலர்/,
செயல் அலுவலர்(I/C),
வல்லம் பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

**மனுதாரர்:-**

திரு.ஆர். ரெங்கராஜ்,
வெங்கங்குடி கள்ளர் தெரு,
பள்ளிவிடை அஞ்சல்,
மண்ணச்சநல்லூர் தாலுகா,
திருச்சி - 621 112.

Copy to: File
PS/PC 11/11/2020